**மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிமன்றம், சேலம்**

முன்னிலை - திரு.வே.புகழேந்தி, இளநிலைச் சட்டம்,
மாவட்ட நீதிபதி

**2025–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 27–ஆம் நாள் திங்கள் கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2056 ஐப்பசித்திங்கள் 10–ஆம் நாள்**

**குற்றப்பல்வகை மனு எண்.2979/2025**

**(C.A.No.173/2025)**

**CNR.No.TNSA01–005682–2025**

STC.No.3821/2019 of the Judicial Magistrate No.I, Salem

**01. N.ரமேஷ்(52)**
**த/பெ. நாகராஜன்,**
**16/3/72D, கிருஷ்ணா நகர் முதலாவது குறுக்கு,**
**அம்மாபேட்டை,**
**சேலம் – 636 003.**

**02. M. செந்தில்(35),**
**37/4, வடக்கு முனியப்பன் கோவில் தெரு எண்.1,**
**கருங்கல்பட்டி, குகை,**
**சேலம் – 636 006. ... மனுதாரர்கள்/2, 3–ஆம் மேல்முறையீட்டாளர்கள்**

**–எதிர்–**

**M/S. ஸ்ரீ மீனாட்சி டெக்ஸ்டைல்ஸ் புராசஸ்,**
**A firm rep. By its partner S.Jeeviha (28)**
**W/o.A. Anand, having its business place at**
**274/3, நேதாஜி நகர், களரம்பட்டி,**
**சேலம் – 636 015. ... எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர்**

இந்த மனு இன்று விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்குரைஞர் **திரு. A.சுரேஷ்குமார்** அவர்கள் தோன்றி எடுத்துரைத்த வாதங்களை கேட்டும் வழக்குக் கோப்புகளை பரிசீலித்தும் இந்த மனுவில் இன்று இந் நீதிமன்றம் ஆணை பிறப்பிக்கிறது.

**ஆணையுரை**

01. சேலம் 01-ஆம் நீதித்துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் சுருக்கு-முறை விசாரணை வழக்கு எண்.3821/2019 என்ற வழக்கில் 23.09.2025-ஆம் தேதியன்று பிறப்பித்தத் தண்டனையின் நிறைவேற்றத்தை நிறுத்தி வைக்கக் கோரி மனுதாரர்கள்/குற்றவாளிகள் பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதாவின் 430-ஆம் பிரிவின்கீழ் இந்த மனுவை தாக்கல்செய்துள்ளார்கள்.

02. மனுதாரர்கள் தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன. மனுவின் சங்கதிகள், தீர்ப்புரையின் உள்ளடக்கங்கள் பரிசீலிக்கப்பட்டன. மாற்றுமுறை -யாவணங்கள் சட்டத்தின் 138-ஆம் பிரிவின்கீழான குற்றத்திற்கு மனுதாரர்கள்/குற்றவாளிகளுக்கு ஓராண்டு காலம் சாதாரண சிறைதண்டனை விதித்தும் வழக்குக் காசோலை தொகையான 3,40,247/- (மூன்று இலட்சத்து நாற்பதாயிரத்து இருநூற்று நாற்பத்தேழு) உரூபாயை இழப்பீடாக புகார்தாரருக்கு மூன்று மாத காலத்திற்குள் வழங்க வேண்டும் என்றும் தவறுகை தண்டனை விதித்தும் மனுதாரர்களுக்கு எதிராக விசாரணை நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பையும் தண்டனையையும் எதிர்த்து மனுதாரர்/எதிரி இந்த மேல்முறையீட்டைத் தாக்கல்செய்துள்ளார். தீர்ப்புரை 29.09.2025-ஆம் தேதியன்று பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. விசாரணை நீதிமன்றம் சுருக்குமுறைவிசாரணை வழக்கு எண்.3821/2019-இல் 23.09.2025-ஆம் தேதியன்று பிறப்பித்த ஆணையின்படி தண்டனையின் நிறைவேற்றம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மாண்புமை உச்ச நீதிமன்றத்தின் தீர்முடிவின்பேரில் இழப்பீட்டுத் தொகையில் 20% தொகையை வைப்பீடு செய்ய வேண்டுமென்பது ஒரு முழுமையான விதி அல்ல என்றும் அது

மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் விருப்புரிமை என்றும் மனுதாரர் தரப்பில் வாதிட்டனர்.

03. இந்த வழக்கில் உள்ள சான்றுகளின் தொடர்புடைமை, ஏற்புடைமை விசாரணையின்போது பின்பற்றப்பட்ட நடைமுறைகள் ஆகியன குறித்து மேல்முறையீட்டில் விவாதிக்கப்பட வேண்டியுள்ளது என்றும் அதற்கான முகாந்திரம் உள்ளது என்றும் இந்த நீதிமன்றம் கருதுகிறது. ஆகையால், இந்த மனுவை அனுமதித்து விசாரணை நீதிமன்றம் மனுதாரருக்கு விதித்துள்ள தண்டனையின் நிறைவேற்றத்தை நிறுத்தி வைப்பது அவசியம் என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

04. இறுதியாக இந்த மனு அனுமதிக்கப்படுகிறது. மேல்முறையீடு முடிகின்றவரை மனுதாரர்கள்/குற்றவாளிகளுக்கு விதிக்கப்பட்ட தண்டனை-யின் நிறைவேற்றம் பின்வரும் நிபந்தனைகளுடன் நிறுத்திவைக்கப்-படுகிறது.

(i) இந்த ஆணையுரையின் சான்றிட்ட நகல் பெறப்பட்ட நாளிலிருந்து 15 நாட்களுக்குள் இரு பிணையதாரர்களுடன் மனுதாரர்கள் தலா 10,000/- (பத்தாயிரம் மட்டும்) உரூபாய் மதிப்பிற்கு சேலம் 01-ஆம் நீதித்துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் பிணைமுறி எழுதிக் கொடுக்க வேண்டும்.

(ii) மனுதாரர்கள் இன்றிலிருந்து 60 நாட்களுக்குள் இழப்பீட்டு தொகையில் 20% தொகையை சேலம் 01-ஆம் நீதித்துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய வேண்டும்.

(iii) மனுதாரர்கள் தலைமறைவாகக்கூடாது. அவர்களுடைய தோன்றுகை தேவைப்படும்போது இந் நீதிமன்றம் ஆணையிட்டால் தோன்ற வேண்டும்.

**இந்த ஆணையுரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 27–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.**

**ஒப்பம்(வே.புகழேந்தி)**
**மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**சேலம்.**